உ

சிவமயம்

# யாமிருக்க பயம் ஏன்



காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும்,

வவுனியா தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட

## திரு தம்பையா இலட்சுமணன் (லிங்கேஸ்)

அவர்கள் அமரத்துவமடைந்தமை குறித்த

## நினைவு மலர்

In Memory of

**Late Mr. Thambiya Lachumanan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர் திரு தம்பையா இலட்சுமணன் (லிங்கேஸ்)



மண்ணில்
22.
07.
2016.

விண்ணில்
15.
10.
2016.

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த புரட்டாதியில்
பூண்ட பௌர்ணமி திதியதனில் - மாண்பு
தம்பையா மைந்தன் மேவுபுகழ் இலட்சுமணன்
எம்பிரான் கழலடைந்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் துதி

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருள்எலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

### தேவாரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

### திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு)அமுதினைஎதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ்சிவிகையாவூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண்ணிழிசெழுங்கோயில்
யோகநா யகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீரும்திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்கு ஆள்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

நின்றாலும் இருந்தாலும்
கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும்
விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம்
ஒருகாலும் மறவாமை
குன்றாத வுணர்வுடையார்
தொண்டராம் குணமிக்கார்

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த அமரர் தம்பையா இலட்சுமணன் அவர்களின் வாழ்க்கைச்சரிதம்

ஈழத்திருநாட்டுக்கு சிகரமாக விளங்குவது யாழ்ப்பாண தீபகற்பம், இத்தீபகற்பதிற்கு திலகம் போல் திகழ்வது காரைநகர் ஈழத்துச் சிதம்பரம். சைவமும் செந்தமிழும் சைவசமய பண்பாடும் தழைத்தோங்கும் இந்நகரின் பலகாடு எனும் கிராமத்தில் உயர் சைவ வேளாள மரபில் உதித்த திரு கந்தர் தம்பையாவும் அவரின் துணைவி சிவக்கொழுந்தும் செய்த தவப்பயனால் தன்னலமற்ற நன்மகனாக தம்பையா இலட்சுமணன் அவர்கள் நான்காவது புதல்வனாக 22.07.1946ல் பிறந்தார்.

திரு தம்பையா இலட்சுமணன் அவர்களுக்கு பாசமும் அன்பும் நிறைந்த சகோதரர்களாக சங்கரப்பிள்ளை, விசாலாட்சி, அருளம்பலம் ஆகியோர் மூத்த சகோதரங்களாகவும் சுந்தரலிங்கம், சிவசுப்பிரமணியம், தேவராசா, மகேஸ்வரி, சரோஜினிதேவி, தங்கபுஷ்பம், ஜெயக்குமார், சந்திரகுமாரன் ஆகியோர் இளைய சகோதரங்களாக பிறந்தனர்.

இவர் இளமையில் தனது ஆரம்ப கல்வியை வியாவில் சைவ பாடசாலையிலும், மேற்கல்வியை யாழ்ற்றன் கல்லூரியிலும் கற்றார்.

இவரது பள்ளி பருவத்தை தொடர்ந்து இவரது இருபதாவது வயதில் சொந்த தொழில் முயற்சியில் ஈடுபட்டார் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் இவர் இல்லறம் எனும் அரிய கருத்தை நன்கு உணர்ந்து 1975ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ம் திகதி அன்று காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த ஆறுமுகம் செல்லம்மா தம்பதிகளின் புதல்வி இராஜேஸ்வரி அவர்களை தனது இல்லறத் துணைவியாக தேர்ந்து எடுத்துக் கொண்டார். அவர்களின் இல்லறப்பூங்காவில் முருகன் திருஅருளால் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 13ம் திகதி ஒரு ஆண்மகன் பிறந்தார். அவர் தன் மகனுக்கு விஜேந்திரா எனும் நாமம் சூட்டி மகிழ்ந்தார்.

அதே தருணம் இவர் தனது மனைவியின் தாயாரான ஆறுமுகம் செல்லமா அவர்களை பெற்றதாய்க்கு ஈடாக பண்போடும், பாசத்தோடும், தக்கமரியாதையோடும் தன் குடும்பத்தோடு பாதுகாத்து வந்தார்.

இவர் தன் மகனுக்கு ஆரம்ப கல்வியை காரைநகர் யாழ்ற்றன் கனிஷ்ட பிரிவிலும், பின்பு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்திலும், அதன் பின்பு நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியிலும் பயிற்றுவித்தார். அதன்பின், இவர் உயர்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவரது மகனை மலேசியா மற்றும் இங்கிலாந்தில் பட்டப்படிப்பான B.A Business Studies படிப்பித்து மகிழ்ந்தார்.

இவரது மகன் லண்டனில் பணிபுரிந்துகொண்டு இருக்கும் தருணத்தில், அதே லண்டனில் வசித்துவரும் காரைநகர் தங்கோடையை சேர்ந்த பாலசுப்பிரமணியம் சவுந்தராதேவி தம்பதிகளின் ஒரே புதல்வியான திருமகளை, தனது மகனுக்கு திருமணம் செய்ய நிற்சயம் செய்து, 2012ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி லண்டனில் விவாக பதிவு திருமணமும், 2013ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி மாதம் 28ம் திகதி இலங்கையில் இந்து முறைப்படி திருமணம் செய்துவைத்து மகிழ்ந்தார்.

ஏப்ரல் 2015ம் ஆண்டு இவரது தொண்டையில் ஒரு கட்டி இருப்பதாக உணர்ந்து, பரிசோதனை செய்து, பின்பு யாழ்ப்பாணம் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று குணமடைந்தார்.

பின்பு 2015ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி இவரது ஆசைக்கேற்ப பேரக்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சக்தி எனும் தெய்வீக நாமத்தைச் சூட்டி மகிழ்ந்தார். தன் பேரக்குழந்தையின் மழலை மொழியைக்கேட்டு வாழ்வின் அளவிலா ஆனந்தம் அடைந்தார்.

இவர் மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை குடும்பசகிதம் இன்புற்றிருக்கும் வேளையில் 2016ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதி சனிக்கிழமை காலை 9மணி அளவில் சிவபதம் அடைந்தார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Biography of

### Late Mr.Thambiya Lachumanan of Palakadu Karainagar

The crowning glories of the country of Sri Lanka are the islands of Jaffna. In these islands, Karainagar Elathu Chithamparam Temple is an acknowledged jewel. Karainagar is an island well known for their people's pride of Hinduism (Saivam), Tamil and religious rituals. Karainagar Palakadu area boasts one of the oldest temples in this island, The Palakadu Rajarajeshwary Amman Temple. Mr Kanthar Thambaiya and his wife Mrs Sivakolunthu are from this area's Hindu (Saiva) Vellalar caste. Due to their prayers and good deeds, Mr Thambaiya Lachumanan was born as a selfless and honest fourth son on 22nd of July 1946.

Mr Thambaiya Lachumanan has eleven loving and caring siblings. Sangarapillai, Visalachi, and Arulampalam were born as his elder siblings and Suntharalingam, Sivasubramaniam, Thevarajah, Maheswary, Sarojinithevi, Thangapushpam, Jeyakumar and Chandrakumaran were born as his younger siblings.

Mr Thambaiya Lachumanan started his early education at Viyavil Hindu (Saiva) School, and then completed his education at Yarlton College.

After completing his education, in his 20th year he started the process of self-employment in the form of business.

Meanwhile, as he understood the importance of marriage and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

married life he then selected and married Rajeshwary daughter of Mr Arumugam and Mrs Chellama from Thangodai Karainagar

on the 09th of February 1975. As a result of this beautiful marriage and due to his devotion to Lord Muruga a handsome son was born on the 13th of July 1984. Mr Lachumanan joyfully named his son Vijenthra to his delight.

Along with his wife and son, he also looked after his wife's mother Mrs Arumugam Chellama with love, devotion and self-respect as an equal to his own mother.

He started his son's early education at Yarlton Primary School, then Vavuniya Mathiya Maha Vidyalayam and thereafter Negombo Wijayaratnam Hindu Central College.

As he understood the importance of higher education, he then sent his son abroad to Malaysia and England to complete a degree in BA Business Studies to his contentment.

While his son was working in London, he arranged for his son to marry Thirumagal the only daughter of Mr Balasubramaniam and Mrs Savuntharathevy of Thangodai Karainagar, whom were also living in London. As per his wishes, his son's registry marriage was completed on 28th of January 2012 in London, England and the Hindu wedding ceremony was completed on 28th of January 2013 in Vavuniya, Sri Lanka.

In April 2015, he felt that there was a small lump in his throat. This was investigated and he received treatment from Jaffna Tellipalai Cancer Institute and then entered in to the state of remission.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

On the 9th of November 2015, to his upmost desire and satisfaction a granddaughter was born. He happily named his granddaughter the devotional name of Sakthei and gained fulfilment. Thereafter, from hearing his granddaughter's speech and her voice he experienced the most pleasurable moments of his life.

While living harmoniously amongst his wife, son, daughter-in-law and granddaughter, on Saturday the15th of October 2016 at about 9:00am Mr Thambaiya Lachumanan departed this mortal world.

Those without love live for themselves; those with love live for everyone around them.

Those who live a selfless life on earth are believed to be regarded as God in heaven.

Ohm shanthi shanthi shanthi!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

காலம் எல்லாம் துணையாக என் கரம்பற்றி நின்றிரே,
உம் காலடியில் நான்  கிடந்த்து பணி  புரிய தினம் துடித்தேன்,
காலன்தான் உமைக்கவர்ந்து என்னை தவிக்க வைத்தானோ,
கண்ணை இமை காப்பது போல் எம்மை காத்து வந்தீரே,
உம் கண்மணி கதறியழும் காட்சியை என்னால் தாங்க
முடியவில்லை,
கலங்கி நிற்கின்றேன் என் அன்புக் கணவரே!

## மகன் புலம்பல்

அப்பா நீங்கள் எம்மோடு வாழ்ந்துவிட்டு,
என்னை, பாசமுடன் தாலாட்டி, ஆசையுடன் முத்தமிட்டு,
பண்பான பழக்கவழக்கத்தையும் படிப்பையும் தந்துவிட்டு,
கண்ணோடு இமையாக நம்மோடு இருந்துவிட்டு,
எங்கு விட்டு சென்றீரோ இங்கு நாம் தவிக்கின்றோம்,
ஒன்றுமே சொல்லாமல் எம்மை பிரிந்து விட்டிரே,
என் மகளை தழுவாமல் தரணி விட்டு சென்றீரே,
இறைவனுடன் சேர்ந்தெங்கள் தெய்வமாய் மாறியதால்,
இமைக்கும் பொழுதெல்லாம் எம்மை காத்து வருவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகள் மற்றும் பேரப்பிள்ளை புலம்பல்

மருமகளாய் வந்த என்னை மகளாக நினைத்தீரே,

மறுபடியும் என்று உம்மை மனம் ஆற பார்ப்பேனோ,

பாசத்தை பகிர்வதற்கு பணக்காரன் நீர் மாமா,

பதறி அழுகின்றோம் உம் பிரிவை எண்ணி நாமும்,

வண்ணப் படமுண்டு, வான் அளவு புகழ் உண்டு,

எண்ணி பார்க்கையிலே இன்று நீர் இங்கு இல்லை,

கண்ணிரண்டு இருந்தும் காண வழி இல்லை.

மண்ணுலகில் உம் வாழ்வு நிறைந்ததால் இன் நிலமை,

ஆசைக்குழந்தையாய், அழகான பேர்த்தியாய் சக்தி பிறந்தாளே,

உமக்கு சந்தோஷம் தந்தாளே, கட்டி தழுவிடத்தான்

காலம் பொறுக்கவில்லை,

தித்திக்கும் உம் பாசம் தினமும் நாம் உரைப்போம்,

வெள்ளை உள்ளமும், வெழிப்பான தோற்றமும், பிள்ளைபோல்

மனமும், பொங்கிடும் புன்னகையும், சொல்ல

வார்த்தையில்லை ஜொலித்திடும் உம் பெருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமியார் புலம்பல்

அன்பு மருமகனே அல்லும் பகலும் என்னை
அன்னைபோல் பார்த்தீரே,
பண்பும் பாசத்துடன் பராமரித்து வந்தீரே,
வீட்டுக்கு வந்து நீங்கள் விடிவிளக்காய் இருந்தீரே,
இடம் பெயர்ந்தும் என்னை இன்பமுடன் பார்த்தீரே,
என்னை விட்டு நீங்கள் எங்கு சென்றிர் மருமகனே,
இறைவனை நாடியல்லோ இல்லம் விட்டு சென்று விட்டிர்.

## இதய அஞ்சலி

அன்புநல் அடக்கம் மேன்மை,
அறிவினால் சிறந்த ஞானம்,
குன்றினைபோல் உயர்ந்த,
குணமது தெளிந்த கூற்று,
தன்னலம் பாரா உள்ளம்,
தளர்விலா உழைப்பு மேன்மை,
துன்புற கண்டு உள்ளம்,
துவண்டிடும் இனிய நெஞ்சம்,
தந்தையை போல எவர்க்கும்,
தக்க பல அறிவுரைகள்,
சிந்தை இனிக்க சொல்லும்,
சிங்கார சொல்வழக்கு,
விந்தை மனிதர் பலர்,
வீற்றிருக்கும் பூமியிலே,
எந்தை தமிழ் அன்னை,
ஏற்றி வைத்த பொற்தீபம் ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை இதழின் ஓரம்,
பூத்திட்ட மக்கள் தன்மை,
தன்வசம் ஆக்கிக்கொண்ட,
தன்னிகரில்லா தீபம்,
எம்மையெல்லாம் ஆறாத்துயர் கடலில்,
ஓய்வின்றித் தவிக்க விட்டு,
ஓய்ந்து விழி முடி விட்டாய்,
பாய்ந்து விடும் வெள்ளமதில்,
பரிதவிக்கும் உயிரினம் போல்,
மாய்ந்து அழ வைத்து விட்டு,
மறு உலகம் சென்று விட்டாய்,
புண்பட்டு நெஞ்சமெல்லாம்,
புலம்பி நிதம் அழுவதன்றி,
மண்மீது நாமுமக்கு,
மாறென்ன செய்வதையா!

**சகோதரர்மார், சகோதரிமார்,**
**மச்சான்மார், மச்சாள்மார்,**
**பெறாமக்கள், மருமக்கள்**
**உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

ஒரு மட மாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமரரும்பு கமடம் இதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகள் என்ற
உருவமும் ஆகி உயிர் வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரமகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

ஒளிநகை ஊறல் இதழ் மடவாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவினிலிருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரடோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குரு உபதேசம்
முத்தமிழின் கலையும் கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ் பதினாறு பிராயமும் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதனசொரூபன் இவன் என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர் பிறகோடி
தேடிய மாமுதல் சேர வழங்கி

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்திருகண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோதமடைந்து
செங்கையில் ஓர் தடியும் ஆகியே

வருவது போவது ஒருமுதுகூனும்
மந்தி எனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல் மொழிந்து
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

கடன்முறை பேசும் என உரைநாவும்
உறங்கிவிழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே

வளைபிறை போல எயிறும் உரோமம்
முன்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமலை போல் யமதூதர்கள் வந்து
வலைகொடு வசீ உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலமறிந்து

வரிசை கெடாமல் எடும் எனஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடமூடி அழல் கொடுபோட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது இல்லத் தலைவரான **அமரர் தம்பையா லட்சுமணன்** அவர்கள் 2016ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15ம் திகதி காலை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த நேரத்தில் அங்கு பரிசோதனை செய்த வைத்தியர்களுக்கு அங்கு பணிபுரியும் தாதியர்களுக்கும், உதவி செய்த உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுக்கும், அவர் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியறிந்த உடனே அங்கு வந்து உதவி செய்த அன்புள்ளம் கொண்டவர்களுக்கும், நேரிலும், தொலைபேசியிலும், குறுந்தகவல் மூலமும், சமூக ஊடகத்துவ மூலமும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்க்கும், அவரது கண்ணீர் அஞ்சலியை பதிப்பிட்ட ஊடகங்களுக்கும், 17.10.2016 இல் இவரது மரணச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், பலவிதத்தில் உதவி செய்தவர்களுக்கும், 13.11.2016 அன்று நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும், இன்று (14.11.2016) அன்று நடைபெற்ற சபிண்டீகரண கிரியை, ஆத்மா சாந்தி பிரார்த்தனை மற்றும் மதிய போசனம் என்பவற்றில் கலந்துகொண்ட உறவினர் நண்பர்கள் அனைவர்க்கும், அதே தருணம் அன்னார் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுகொண்டு இருந்த தருணத்தில் சிகிச்சையழித்த மருத்துவர் மற்றும் தாதிமார்களுக்கும், அத்தருணம் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், இப்பதிகத்தை மிகச்சிறிய காலத்தில் அச்சிட்ட பதிப்பகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளையும் அன்பையும் தெரிவித்து கொள்கின்றோம்.


இங்ஙனம்

**மனைவி, மகன், குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் தம்பையா இலட்சுமணன் அவர்களின்

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org